## தமிழ் வளர்ச்சித் துறை

0

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. **அ. சண்முகசுந்தரம்** இ.ப.ஆ.அவர்கள்<br>மாவட்ட ஆட்சித் தலைவர்<br>வேலூர் மாவட்டம் | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>வேலூர் |

27/1/20

திருவள்ளுவராண்டு 2050/விகாரி / மார்கழி - 21
ந.க.எண். 232/2019, நாள் : 06.01.2020.

451

ஐயா,

முதன்மைக் கல்வி அலுவலர்
பெறப்பட்டது
22 JAN 2020

பொருள் : தமிழ் வளர்ச்சி - திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு – 1330 குறட்பாக்களையும் முற்றோதும் மாணவர்களுக்கு ரூ.10,000/- பரிசு – தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறுதல் - பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை :
1. **அரசாணை (நிலை) எண்.202,203, தமிழ் வளர்ச்சி,** அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ 1.2)த்துறை, நாள் : 26.12.2011.
2. மாண்புமிகு தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சரின் ஆய்வுக்கூட்டம், நாள் : 20.12.2018.

= = = = =

மாணவர்கள் இளம் வயதிலேயே திருக்குறட்பாக்களை மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டும். தாம் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாகவும், திருக்குறள் நெறி பரவ வழிவகுப்பதாகவும் அமையும். அதனைக் கருத்தில் கொண்டு, 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்கள் திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத்தொகை ரூ.10,000/-, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

அவ்வகையில், நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகியவற்றில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. எனவே, அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும். மேலும், திருக்குறள் முற்றோதும் மாணவர்கள் இருப்பின் அவர்கள் தமிழ் வளர்ச்சி துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைதள

முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவுசெய்யப்பெற்ற விண்ணப்பங்களை வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக அ பிரிவு கட்டிடம் நான்காம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவகத்தில் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும். [தொலைபேசி எண். 0416-2256166]. பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்களிலும் மாணவர்களின் வழியே பெற்றோருக்கும் இது தொடர்பில் விழிப்புணர்வு அளிக்கப்பெறும் வகையில் தலைமை ஆசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்</u>

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- வேலூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப் பரிசினை ஏற்கனவே பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

இணைப்புடன்-

ஒம்/- **அ. சண்முகசுந்தரம்**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்

//நேர்பபடி அனுப்பப்பெறுகிறது//

10/01/2020

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக